109

போதனை விஷய பூங்கொத்து

19 JUL 1945

109

மாதமொருமுறை மலரும்

Venkatachalam
S. 1941-43

Edito...
Pub...
... A. Lourduswami, B.A., L.T.
...aining School, Trichinopoly.

3L
ஊ211, N11PP
N45.35.12
210002

...6 ஜுன் 1945 மலர் 12

...னுமுறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

...ாய் 1. தனிப்பிரதி அணு 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 35] 15 ஜூன் 1945 [மலர் 12

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1945. சென்ற மார்ச்சு மாதம் நடை பெற்ற ஷை பரீட்சையில், ஸெக்கண்டரி கிரேடு மாணவர்களில் 60%-ம் எலிமேண்டரி கிரேடு மாணவர்களில் 82%-ம் தேறியுள்ளார்கள். விவரம் மற்ருேரிடத்திற் காண்க. இவர்களனைவர்க்கும் எமது மனமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

ஷை பரீட்சையில் ஸெக்கண்டரி கிரேடில் முதன்மையாகத் தேறியுள்ள K. Maria Antony (53%) என்பவருக்கும், எலிமேண்டரி கிரேடில் முதன்மையாகத் தேறியுள்ள C. Chinnayan (51%), M. Pitchaimuthu (51%) இவர்களுக்கும், நம் பாடசாலேதினக் கொண்டாட்டத்தன்று பதக்கப்பரிசு வழக்கம்போல் அளிக்கப்படும்.

* * *

ஷை பரீட்சையில் தவறிப்போன ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள் எந்தெந்தப் பாடங்களில் மீண்டும் பரீட்சை எழுதவேண்டுமென்பதை அவரவர் பெயருக்கு எதிரில் குறித்துள்ள 'குருப்பு' (Group) மாத்திரம் படித்து பரீட்சை எழுதவேண்டும்.

ஷை எலிமெண்டரி கிரேடு பரீட்சையில் தவறிப்போனவர்கள் பெயர், அவர்கள் எந்தெந்தப் பாடங்களில் மீண்டும் பரீட்சை எழுதவேண்டுமென்பதைப்பற்றி அடுத்த ஜூலை மாதத்திய "பூங்கொத்தில்" பிரசுரிப்போம்.

* * *

நம் பூங்கொத்தின் பக்கங்கள்.—இம்மாத மலரிலிருந்து "நம் பூங்கொத்து" 16 பக்கங்களுடன் வெளியாகின்றது. இங்ஙனம் இதன் பக்கங்களே அதிகப்படுத்துவதற்காகவே இம்மாதம் இதுவரை தாமதிக்கவேண்டியதாய் இருந்தது. அடுத்த மாதத்திலிருந்து 16 பக்கங்களுக்குக் குறையாமல் வழக்கம்போல் வெளியாகிவரும். இன்னும் நம் "பூங்கொத்தின்" பக்கங்களே அதிகப்படுத்த எம்மாலானவரை முயன்றும் வருகிருேம்.

* * *

நம் பாடசாலே ஹைஸ்கூல். **(High School)** நம் பாடசாலேயில் இவ்வருஷம் ஜூன் மாதத்திலிருந்து ஹைஸ்கூல் IV பார (IV Form) தொடங்கி வேலேசெய்து வருகின்றது. திருச்சி பள்ளி கண்டோன்மேண்டில் இதுவரையில் ஒரு ஹைஸ்கூ...

குறை இப்போது நீங்கிவிட்டது. நம் R. C. High School-ல் எல்லா பாரங்களுக்கும் (Forms) மாணவர்கள் வந்து கூடுகின்றனர். இது மகிழ்ச்சிக்குரியதே! இதை உத்தேசித்து ஒவ்வொரு வகுப்பையும் பிரிவுகளாகப் (Divisions) பிரித்திருக்கிறோம். எனவே, நம் பாடசாலை ஹைஸ்கூல் வகுப்புகளில் சேர்ந்து கல்விகற்க விரும்புகிறவர்கள் அனைவர்க்கும் வேண்டிய இடவசதியளித்து வருகிறோம். மேலும் இந்த வருஷத்தில் நாம் தொடங்கியுள்ள IV பாரத்திலும், ஏனைய வகுப்புகளிலும் சேர்ந்து படிக்கும், படிக்க விரும்பும் மாணவர்கட்கும் எம்மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இதோடு நம் பாடசாலை அபிமானிகளும் ஏனைய நேயர்களும் நம் ஹைஸ்கூல் அதிகமதிகமாக, மாணவர் தொகையிலும் வகையிலும் விருத்தியடையத் தம்மால் இயன்றவரை நம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

Training-School Leaving Certificate Examination 1945

SECONDARY GRADE

Pass List

Reg. No.	Name	Marks
8258	S. Jebamani	50
8260	N.R. Nanjundeswaran	74
8261	K. Maria Antony	53
8263	M. A. Lourduswami	44
8265	M. L. Jebaputhiran	44
8267	L. Arokiasamy	47
8270	P. S. Germanappan	46
8271	P. K. Subramanian	39

8273 S. Chelliah 44

Failures

Reg. No.	Name	Group in which failed
8259	A. Devasagayam	D
8262	A. David	D
8264	J. S. Xavier Fernandez	D
8266	M. Francis	D
8268	M. Edward	AD
8269	R. Chinnappan	D
8272	V. Alagirisamy	AD

ELEMENTARY GRADE

Pass List

Reg. No.	Name	Marks
3256	C. Chinnayan	51
3258	C. Veda Kirubakaran	42
3260	T. Jacob	35
3261	V. Innacimuthu	49
3262	A. Arulanandam	43
3263	S. Antony Viyagappan	48
3264	N. Arumugam	41
3266	M. Malaiyappan	43
3267	M. Pitchaimuthu	51
3268	A. Rathinasamy	44
3269	K. A. Arokiam	42
3270	A. Muthappan	38

Reg. No.	Name	Marks
3272	A. Jeya Rosa	38
3275	A. Ignaci	41
3276	M. Savarirayan	44
3277	P. S. Rathinasamy	41
3278	M. Alphonse	40
3280	S. Aruldas	40
3281	P. Gnanadikam	47
3282	S. Manickam	43
3283	A. Vedam	40
3284	R. Kulandaisamy	41
3286	R. Maria Thangasamy	37
3287	A. Antony	44
3288	S. Veerakannu *alias* Mariadoss	35
3289	G. Gnana Davamani	46
3290	A. Susaimanickam	39
3293	V. Seeni Ochathevan *alias* Maria Stephen	43
3294	M. Anthonisamy	45
3295	G. Gnanasamy	41
3296	V. Antony Rayappan	47
3297	G. A. Anthonisamy	39
3299	R. Gnananandhasamy	41
3300	K.M.S. Kulandaisamy	39
3301	M. Karivandan	44
3302	C. Vedamuthu	41
3303	A. Sebastian	39
3304	S. Peter Devadoss	42
3305	I. Gnanakkan	39
3307	S. Vedamuthu Arockiam	46
3308	M. Chinnappan	40
3311	S. Antonisamy	39
3312	V. M. Antonimuthu	40
3313	G. Michaelsami	43
3314	A. Joseph	40
3315	D. Abraham	34
3316	S. Sebastian	36
3318	R. Ignatius Jeganathan	36
3319	G. Maria Michael	46
3320	S. Rethinam	46
3321	R. Arulappan	45
3322	A. S. Kulandai	37
3327	P. Pitchai	40
3328	K. P. Kunchithapatham	41
3329	S. Madalaimuthu	42
3330	A. Sivaprakasam	41
3331	K. M. Antony	42
3333	I. Velankanni	40
3335	S. Thomas	37
3337	N. Jebamalai	36
3338	S. Devadoss	34
3339	V. Paul Muthusamy	36
3340	S. Thomas	34
3341	A. Soosaimanickam	34
3342	M. Antonisami	39
3343	R. Alagarsamy	38
5105	S. Arockiam	37
3796	S. Karayalan *alias* Lourdusami	41
3384	M. Ignacimuthu	38
3172	S. Francis	39

WANTED a Secondary Grade Teacher. Pay Rs. 25/- per Month. Apply to Correspondent, R. C. School, Anandarayankottai, Dindigul Taluk.

சென்னை கல்வி இலாகா

G. O. 707, Education, 2nd May 1945—Page 195 of Fort St. George Gazette Part I-B dated 8th May 1945.

ஷை உத்தரவின்படி, 1940—41-ம் வருஷத்திலோ, அதற்குப் பிந்திய வருஷங்களிலோ ஹையர் எலிமெண்டரி கிரேடு பயின்று தேர்ச்சிபெற்றவர்கள், சென்னை யூனிவெர்ஸிடி மெட்ரிகுலேஷன் பரீட்சையிலோ (The University Matriculation Examination) அல்லது காலேஜ் படிப்புக்கு லாயக்கான வேறெந்த பரீட்சையிலோ பாஸ்செய்தவர்கள் (Eligible for admission to University course) மறுபடியும் போதனுமுறைப் பயிற்சிக்குப் போகாமல், நேராய் ஸெக்கண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுத அனுமதிக் கப்படுவார்கள்.

J/10002

என்ன இன்பம்! எவ்வளவு பிரயோஜனம்!!

அறிவாளிகள் அரிய ஆராய்ச்சிகள் ஆற்றி வருகின்றனர்: பூமிக்குள் புதைந்துகிடக்கும் பொருட்களைத் (Fossils) தோண்டிப்பார்த்து பூர்விக மக்களின் வாழ்க்கைகளைக் கணிக்கின்றனர்; பாறை, கல், மண் முதலிய ஜடப் பொருள்களின் தன்மைகளைப் பரிசோதித்துக் காட்டுகின்றனர்; செடி, கொடி, விருக்ஷங்களின் விசித்திரங்களை விஸ்தாரம் செய்கின்றனர்; வண்டு, நண்டு, எறும்பு, தேனீ, முதலிய பூச்சிகள், பறவைஜாதிகள், வீட்டு, காட்டு மிருகவகைகள் முதலிய ஜீவப்பிராணிகளின் இயல்புகளையும் உபயோகங்களையும் விரிவுபடுத்துகின்றனர். இன்னும் பலவாறுகப் பல பௌதீக, இரஸாயனத் துறைகளிலும் ஆராய்ச்சி செய்கின்றனர் அறிவாளர்கள்!

ஆயினும் என்ன? மனித வர்க்கத்திற்குத் தாழ்ந்த உயிர்களைப் பற்றித்தானே அந்த ஆராய்ச்சி? ஆனால், நம் ஆசிரியர்கள் ஆற்றும் ஆராய்ச்சிகள் எத்தகையன! மேற்கூறிய நிபுணத்துவத்தைவிட தாழ்ந்தவையா? ஆறறிவு படைத்த மனிதவர்க்கத்தின் இளம் முளைகளாய் விளங்கும் சிறுர்களின் இயல்பையும், மனேதத்துவங்களையும் ஆராய்வதற்கு உடன்பட்டு உழைக்கும் உபாத்தியாயர்களது உயர்வு என்னே! இத்தொழிலின் மேன்மை என்னே! என்ன இன்பம்! என்ன சந்தோஷம்!! எவ்வளவு பிரயோஜனம்!!!

ஆசிரியரின் அலுவல் என்ன?

பிள்ளைகள் எல்லோரும் விநோதப்பிரியர்கள்தான். விளையாட்டும், வேடிக்கையும்தான் அவர்களுக்குப் பிரியம். இதில் என்ன குற்றம்? பிள்ளைகள் செய்யும் குறும்புகள் எனப்படுபவை எல்லாம் ஆசிரியரின் சாமார்த்தியத்தைச் சோதிக்கவல்லனவன்றோ?

பிள்ளைகளின் இயற்கைச் சுபாவங்களை நன்கறிந்து விளையாட்டாகவே (விளையாட்டு முறையில்) கல்வி கற்பிக்கத் திறமை இல்லாமல், அவர்களைக் கண்டிப்பதிலும் தூஷிப்பதிலும் என்ன புண்ணியம்? கவனமின்மை, விளையாட்டுத்தனம் முதலிய குறைபாடுகள் பிள்ளைகளிடம் இருப்பது சகஜம்.

இதையெல்லாம் தெரிந்துதானே பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது! ஆசிரியர்களும் நியமிக்கப்படுகிறார்கள்! பிள்ளைகளின் நிலைமைக்குத் தக்கபடி தம்மைச் சரிப்படுத்திக்கொண்டு, அவர்களது சுபாவத்திற்கு இசைந்தபடி கல்வி புகட்டுவதற்கான வழிபாடுகளைக் கைக்கொண்டு நடப்பதா? பிள்ளைகளின்மீது சீறி விழுவதா?

வாய் ஓயாமல் நேரமெல்லாம் பேசிக்கொண்டே, "படித்துக்" கொடுத்துக்கொண்டே, விஷயங்களை புகுத்திக்கொண்டே போதிக்கிறதாக எண்ணிக்கொண்டே "டீச்சிங்" செய்கின்ற ஒரு ஆசிரியரைவிட, பிள்ளைகள் தாமே வேலைசெய்யும்படி தூண்டிவிட்டு, தாம் அருகே நின்று, மௌனம்சாதித்தவண்ணம், ஆனால் தம் கூரியபார்வையுடன், பிள்ளைகளின் வேலையை யூகமாய்க் கவனித்து, சுறு சுறுப்புடன் சுழன்றுவரும் வாய்பேசாத இந்த ஆசிரியரை நான் அதிகமாய்ப் போற்றுவேன்" என்றார் ஓர் பெரியார்!

உணவு ஜீரணமாகும் விதம்

(கொத்து 35, மலர் 10, 11, 81-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

சிறுகுடலில் நன்கு ஜீரணமான உணவுப்பொருட்கள் இரத்தத்துடன் கலக்கத்தக்க தன்மையை அடைந்திருக்கும் என்று கூறினோமல்லவா? இவ்வாறு கரைந்த உணவு ரஸரூபமாக இருக்கும். இதற்கு "கைல்" Chyle என்று பெயர். சிறுகுடலில் ஜவ்வுமடிப்பு பல உண்டு. இவற்றில் ஷை ரஸத்தைக் கிரஹிக்கவல்ல "ரஸாயினிகள்" நுட்பமான குழாய்கள் உள. இவற்றிற்கு Lacteals என்று பெயர். இன்னும் மயிரிழைபோன்ற தந்துகக் குழாய்களும் அமைந்துள்ளன. இந்த தந்துகக்குழாய்கள் ஆகாரத்தின் ஊன்செய்பொருள், மாவுப்

பொருள் ஆகியவற்றின் சத்தை கிரஹிக்கின்றன. எனவே கொழுப்பு சத்தை மேற்கூறிய "ரஸாயினிகள்" கிரஹிக்கின்றன. எனவே கொழுப்புசத்தை ஒருவிதக் குழாய்களும், ஊன்செய், மாவுப் பொருட்களை மற்றொருவிதக் குழாய்களும் (தந்துகிகள்) கிரஹிக்கின்றன என்று தெரியவருகிறது. இவ்வாறு கிரஹிக்கப்பட்ட ஆகார சத்து முதலில் சிறு குழாய்களின் வழியாகவும் பிறகு அவை ஒன்று சேர்ந்த பெரிய குழாய்கள் வழியாகவும் ஓடி இருதயத்தையடைகின்றது. இருதயத்தை அடைந்த இரத்தம் (ஆகாரம்) சில குழாய்களின் வழியாக நுரையீரலை (Lungs) யடைந்து அங்கு சுத்தம் அடைகிறது. அதாவது நுரையீரலில் பிராணவாயுவுடன் இரத்தம் கலந்து, தன்னிடமுள்ள அசுத்தப் பொருளாகிய கரி (Carbon) முதலியவற்றை நீக்கிக்கொள்ளுகிறது. வெளிமூச்சின் வழியாக கரியமிலவாயுவாக வெளிப்படுவது அந்த அசுத்தந்தான். சுத்தம் அடைந்த இரத்தம் சிவப்புநிறம்பெற்று பிராணவாயுவின் அணுக்களை ஏராளமாக ஏற்றுக்கொண்டு, ஜீவன்பெற்று, இருதயத்துக்குத் திரும்பி அங்கிருந்து இருதயத்தின் அமுக்கத்தின் விசை மகிமையால் தேகமெங்கும் இந்த நல்ல இரத்தம் பரவுகிறது. இதுதான் தேகத்தின் பற்பல பாகத்தையும் போஷிக்கின்றது. புஷ்டியையும் வளர்ச்சியையும் அளிக்கின்றது. உணவு தேகத்தில் "ஒட்டுகிறது" (ஒன்றித்தல்) என்பது இதுதான். உணவு இரத்தமாக மாறி அந்த இரத்தம் உடலில் சேர்ந்து ஒன்றுபடல் என்பதாம்.

பாடக் குறிப்பு

பாடம்: **பூகோளம்.** **5-வது வகுப்பு.**

நோக்கம்: துறைமுகமும், அதன் உபயோகங்களும்.

உபகரணம்: மாதிரி உருவங்கள் (Models) சென்னைமாகாண தேசப்படம்.

பீடிகை: வண்டிப்பேட்டை, மோட்டார்—பஸ்—நிற்குமிடம், ரயில்வேஸ்டேஷன் இவை ஒவ்வொன்றும் எதற்காக ஏற்பட்டிருக்கிறதென்றும், அததன் உபயோகத்தைப்பற்றியும் சிறிது சம்பாஷிக்கவும். அவ்வாறே கப்பல் தங்குவதற்கு ஒரு வசதியான இடம் வேண்டுமல்லவா? எது எவ்வாறு அமைகிறது? அதன் உபயோகங்கள் யாவை என்று பார்ப்போம் எனக் கூறவும்.

விஷயமும், முறையும்: ரயில்வேஸ்டேஷனில் ரயில்வண்டிகள் நிற்கவும், பிரயாணிகள் ரயிலில் ஏறவும், சாமான்களை ஏற்றவும், வசதி

களைக் கேட்டு, அவ்வாறே கப்பல் தங்கவும், சாமான்களை ஏற்றவும் இறக்கவும் வசதிசெய்யப்பட்டுள்ள இடத்திற்கு துறைமுகம் என்று பெயர் எனக் கூறவும்.

மாதிரி உருவங்களைக் காட்டி, இயற்கை, செயற்கை துறைமுகங்களின் அமைப்பை விஸ்தரிக்கவும். மேலும் ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளில் கரையோரத்தில் குடைவுகள் இருப்பதைக் காட்டியோ, ஞாபகப்படுத்தியோ விஷய விளக்கம் செய்யத்தகும். அதாவது, கடல் ஜலம் தரைக்குள் குடைந்துசென்று, கரைக்குச் சமீபத்தில் ஆழமாய் ஏற்பட்டுள்ள இடம் இயற்கைத் துறைமுகமாகும். அவ்வாறின்றி மனிதர்களால் கட்டப்படுவது செயற்கைத் துறைமுகமாகும்! சென்னை துறைமுகம் செயற்கைத் துறைமுகம். மாதிரி உருவத்தைக் காட்டுக. க. ப.-யில் வரைந்த படத்தையும் காட்டுக.

பம்பாய், கராச்சி, கொழும்பு, சென்னை, கொச்சி, விசாகப்பட்டினம் இவை ஒவ்வொன்றிலுமுள்ள துறைமுகத்தின் அமைப்பை விஸ்தரிக்க.

உபயோகம்: (1) காற்றாலும், அலைகளாலும் கப்பலுக்கு இடையூறு நேரிடாவண்ணம் கப்பல் தங்குமிடம் அமைந்திருத்தல். (2) பிரயாணிகள் சௌகரியமாய் ஏற, இறங்க. (3) சாமான்களைச் சுலபமாக ஏற்ற, இறக்க.

அப்பியாசங்கள்: (1) இயற்கைத் துறைமுகத்தின் அனுகூலங்கள் யாவை? (2) செயற்கைத் துறைமுகத்தின் கஷ்டங்கள் யாவை? (3) ரயில்வே ஸ்டேஷன் (Goods Shed) சாமான் இறக்கும் இடத்தையும், துறைமுகத் (Harbour) தையும் ஒப்பிடுக. (4) பளுவுள்ள சாமான்கள் எவ்வாறு ஏற்ற இறக்கப்படுகின்றன? (5) கப்பல் தங்குமிடம் ஏன் ஆழமாக இருக்கவேண்டும்?

WANTED one Secondary Grade Trained Woman Teacher on Rs. 30/- plus dearness allowance per mensem. If unmarried, the mistress may remain in the School Hostel. Apply to Rev. Mother Superior, St. Patrick's R. C. Higher Ely. School for Girls, Shevapet, Salem.

WANTED one Secondary Grade Trained Mistress to be Headmistress of the R.C. Girls' School, Purathakudy. Salary Rs. 25/- plus dearness allowance. Apply to the Correspondent, R. C. Girls' School, Purathakudy, Irungalur P. O., Trichy Dt.

“அச்சம் தவிர்; ஆண்மைதவறேல்”

[17—3—45-ல் ஆண்டிமடம், ஆசிரியர் சங்க வருடாந்திர விழாவிற்கு விஜயம்செய்த திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி, ஸ்ரீ T. கிருஷ்ணமாச்சாரியார் தமது முடிவுரையில் செய்த வீரச் சொற்பொழிவின் சாராம்சம்.]

“ஆசிரிய சகோதரர்களே! நீங்கள் உங்கள் வேலையை அதிகாரி களுக்கு அல்லது சட்டதிட்டங்களுக்கு என்று செய்யவேண்டாம். அப்படிச் செய்வதாயின் கல்வியிலாக்காவின் நோக்கமும்—பிரயோ ஜனமும் பயனற்றதாகிவிடும். ஆசிரியர்களாகிய உங்களிடம் பயில வரும் மாணவர்களை உங்கள் பிள்ளைகள் எனவும், அவர்களுக்குக் கல்வி கற்பிப்பது உங்கள் கடமை—வாழ்க்கையின் நோக்கம் எனவும் எண்ணுங்கள். அந்த நினைவோடு உங்கள் பள்ளியை நடத்தினுல் பிள்ளைகளுக்கு இப்பொழுது அளிக்கப்படும் கல்வியறிவைவிட அதிகம் அளிக்கப்பட்டுவிடும்.

பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கையில் அவர்களை அடக் காதீர்கள். பிள்ளைகளுக்கும் சுயேச்சையளியுங்கள். சில பாடசாலைப் பிள்ளைகளை ஏதாவது கேட்டால் கை கட்டிக்கொண்டு பதிலளிப்பார் கள். அந்தப் பள்ளி ஆசிரியர் எவ்வளவு அடக்குமுறை கையாண்டு இருக்கிருர் என்பது இதிலிருந்து தெளிவாகும். இப்படிச் சிறுவயதி லேயே பிள்ளைகளுக்கு அறிவோடு அச்சத்தை ஊட்டி, ஆண்மையை ஓட்டுவதால் பிற்காலத்தில் பிரஜைகளாக ஆகையிலும் அச்சப்பேய் பிடித்து வாழ்க்கையை ஓட்டுகிருர்கள். இப்படி (அச்சம் பிடித்து வாழும்) ஆண்கள் அனைவரையும் கெடுத்துவைத்தது அவரவர்களது ஆரம்ப ஆசிரியர்களே.

இப்படி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அச்சத்தை ஊட்டுவதற்குக் காரணம் என்ன? ஆசிரியர்களது அச்சமனப்பான்மைதான்! ஆசிரி யர்கள் பயமின்றி இருக்கவேண்டியது அவசியம். நீங்கள் குறைந்த ஊதியம் வாங்கிக்கொண்டு அதிக வேலை செய்கையில் ஏன் மற்றவர் களுக்குப் பயப்படவேண்டும்? அதிகச் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை அதிகமில்லாதவர்களல்லவா பயத்துடன் வாழவேண்டும்? கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தும் நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? நீங்கள் அச்சத்தைத் தவிர்த்து ஆண்மை தவருமல் வாழுங்கள். எந்த அதிகாரிகளுக்கும் நீங்கள் பயப்படவேண்டிய அவசியமேயில்லை— உங்கள் கடமையை ஒழுங்காகச் செய்தால்!

நீங்கள் பாடசாலையில் பாடம் நடத்தும்போது யாராவது வாசற் படியண்டை வந்து நின்ருல் உடனே பாடத்தை நிறுத்திவிட்டு அவர் களிடம் ஓடி “யார்?” “எங்கே வந்தீர்கள்?” என்று கேட்கிறீர்கள். ஏன் அப்படிக் கேட்கவேண்டும்? அவர்கள் யாராயிருந்தால்தான் என்ன? மாஜிஸ்ரேட்டாயிருந்தால் என்ன? போலீஸ் சூப்ரண்டா

யிருந்தால் என்ன? ஜில்லா கல்வியதிகாரியாய் இருந்தாலென்ன? (கரகோஷம்) உங்களுக்கு அவர்களைப்பற்றி கவலையேன்? அவர்கள் யார் என்று கேட்பது உங்கள் வேலையா? அன்றி கடமையா? ஒன்றுமில்லையே! இப்படி தாழ்ந்து—தாழ்ந்து, பயந்து—பயந்து நடக்கும் வரை உங்கள் சமூகமே முன்னேறாது! உங்களைக்கண்டால் யாவரும் ஏளனமாக மதிக்கும்படி நேரிடுகிறது! உங்கள் மதிப்பே போய்விடுகிறது! நீங்கள் யார் வந்தாலும் "பாடம் நடக்கும் நேரம் வெளியே போய் நில்லுங்கள்" என்றால் உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றினவர்களாவீர்கள். ஆதலால் அச்சத்தைப்போக்கி ஆண்மை தவறாது வாழும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

முடிவுரையைக் கேட்டுக் களித்த

ம. ஹென்றி ஸாமுவேல்.

ஓர் வாசகசாலைப் புத்தகத்தின் சில விருப்பங்கள்

ஒரு நாள் சிறுமி ஒருவள் தனது வாசகசாலையிலிருந்து ஓர் புத்தகத்தை எடுத்து வீடு சென்றாள். சென்றதும் தனது அறையில் புகுந்து புத்தகத்தை விரித்து படிக்கத்துவக்கும்போது அப்போது அப்புத்தகம் சிறுமிமையைப்பார்த்து சொன்ன சில வாக்கியங்கள் என் காதில் விழுந்தன. அவை பின்வருமாறு:

(1) எனது பிரிய சிநேகிதியே தயவு செய்து என்னை அழுக்குப் படிந்த கைகளால் தொடாதே. ஏனென்றால் மற்றொரு பெண் என்னை மறுபடியும் எடுக்க நேரிடும்போது எனக்கே வெட்கத்தை உண்டுபண்ணும்.

(2) மேலும் என்னை மழையில் விட்டுவிடாதே. ஏனென்றால் புத்தகங்களுக்கும் சிறுவர்களைப்போல் ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும்.

(3) உன்னுடைய பேனாவினாலோ, பென்சிலினாலோ கோலங்கள் இடாதே. அவைகள் என்னுடைய பார்வையைக் கெடுத்துவிடும்.

(4) அல்லது நீ வாசிக்கும்போது உனது முழங்கையை என் மேல் ஊன்றி வாசிக்காதே. அது எனக்கு கொடிய வலியைக் கொடுத்துவிடும்.

(5) மேலும் திறந்து படிக்கும்போது என்னை அப்படியே குப்புறப்போட்டு என் முகம் மேஜையில் படியும்படி விட்டுவிடாதே. ஏனென்றால் உன்னை இவ்விதம் நடத்தும்படி நீ ஒருபோதும் சம்மதிக்க மாட்டாயல்லவா!

(6) மேலும் என்னுடைய இதழ்களின் மத்தியில் ஒரு பென்சிலையாவது அல்லது என் இதழின் பருமனுக்குமேற்பட்ட எந்தச் சாமானையாவது வைத்து மூடிவிடாதே. அது என் முதுகை வளைத்து நோவை உண்டுபண்ணுகிறது.

(7) சில பக்கங்களை நீ வாசித்து முடித்ததும் முடிந்த இடத்தை ஞாபகப்படுத்தும்படி எனது இதழின் மூலையை மடித்து விடாதே. ஆனால் ஒரு சுத்தமான சிறு காகிதத்தை எடுத்து நீ விட்ட இடத்தில் வைத்து என்னை மறுபடியும் மூடி எனது பக்கவர்ட்டத்தில் நிறுத்திவைத்துவிடுவாயேயாகில் நான் நல்ல இளைப்பாற்றியை அனுபவிப்பேன்.

(8) சில சமயங்களில் நான் என்னுடைய வர்ணம்தீட்டிய படங்களுடன் வெளி வருவதுண்டு. அவைகள்தான் எனக்குக் கண்கள்; அவைகளைக்கொண்டு நான் மற்றவர்களுக்குப் பார்வையளிக்கிறேன். சில கொடூர சிந்தனையுடையோர் எனது கண்களைப்போன்ற படங்களை வலுவந்தமாய்ப் பிடித்து இழுத்தோ கத்தரித்தோ எடுக்கும்போது நான் படும்பாட்டை ஐயையோ! என்னென்று இயம்புவேன். உனது கண்களை அவ்விதம் செய்ய நீ சம்மதிப்பாயா? சற்று யோசித்துப்பார்.

(9) என்னை நீ படித்து முடித்ததும் நான் இன்னும் அநேக சிறுமிகளையும், சிறுவர்களையும் தரிசிக்கவேண்டுமென்பதை மறந்துவிடாதே. சில சமயம் நான் உன்னையே மறுபடியும் சந்திக்க நேரிடலாம். அப்பொழுது நான் கிழிந்துக் கிழத்தன்மையை அடைந்தும் அழுக்குப்படிந்திருப்பதையும் நீ கண்டால் அதிக வருத்தமடைவாய். நான் எப்போதும் சுத்தமாகவும் புதிதாகவும் இருக்கும்படி தயவு செய்து எனக்கு உதவிசெய்வாயாகில் நான் உன்னை சந்தோஷிப்பிக்க முன் வருவேன்.

310002

கைவேலையும், கைத்தொழிலும்

கைவேலை என்றால் என்ன? இதன் முக்கிய நோக்கம் யாது? கைத்தொழில் என்றால் என்ன? இதன் முக்கிய நோக்கம் யாது? இவ்விரண்டும் ஒன்றுதானா? இவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தமென்ன? இவற்றைச் சிறிது ஆராய்வோம்.

கைவேலையானது கல்விசம்பந்தமானது. கல்வியறிவிற்கு அடிப்படையாயிருந்து அது வளர்வதற்கு உதவுவது. தேகம், புத்தி, மனம் ஆகிய இம்மூன்றும் ஒருமித்து ஒழுங்காய் ஓங்கச்செய்ய வல்லது. எவ்வாறெனில், கண் உற்றுநோக்குவதைக் கைசெய்யப் பழக்கமடைகிறது. அப்போது மனமும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டியிருக்கிறது.

"செய்வனத் திருந்தச்செய்" என்ற பழமொழிக்கு ஏற்ப எக்காரியமானாலும் அதைத் திருத்தமாயும் நுணுநுணுக்கத்துடனும் செவ்வையாயும் செய்யும் வழக்கத்தை அமைத்துவிடுவதே இதன் முக்கிய நோக்கமாகும். கல்வியின் நோக்கமும் இதுவாதலின் கைவேலையானது கல்வியின்பாற்படுவது முறையென்றோம்.

புத்தகப்படிப்பு விசேஷமாய் மூளையைப் பயிற்சி செய்கின்றது. மனதையும் பயிற்றும். ஆனால் கைவேலை அப்பியாசங்களோ தேகம், புத்தி, மனம் இம்மூன்றும் ஏகோபித்து விருத்தியாகும்படிச் செய்ய ஏற்பட்டவை. இதுபற்றியே, கைவேலையை ஆதரவாகக்கொண்ட படிப்பு பூரணப் படிப்பென்றும், இது ஒருவனை முழு மனிதனுக்கச் செய்யவல்லதென்றும் கூறப்படுகிறது. ஆகவே கல்வியின் முழுப் பயனையும் எய்த விரும்பினால் அதற்குக் கைவேலை அப்பியாசத்தை அடிப்படையாகக் கொளல் வேண்டும் என்பது தேற்றம்.

கைத்தொழில் என்பது தொழில் முறையையும் தொழில் சிறப்பையும் பற்றியது. ஒரு குறிப்பான தொழிலை திறமையுடனும் வேலைப்பாடு உள்ளதாயும், சிறப்பாயும் செய்யப் பழகுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. கைவேலையின் நோக்கம் மேலே காட்டியபடி கல்வியின் நோக்கத்தை ஈடேற்ற அமைந்ததாயிருக்க கைத்தொழிலானது ஒரு குறிப்பிட்ட தொழிலில்மாத்திரம் சித்திபெற உதவியாகின்றது. அன்றியும் கைவேலை எத்தொழில் புரிய வேண்டுமாகினும் எந்த வித்தையைக் கற்கவேண்டுமாகிலும் எந்தப் படிப்பைப் படிக்கவேண்டுமாகினும் அதற்கேற்ற, அதனை ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான மனப்பான்மையை அளிக்க உதவியாயிருக்கிறது.

மேலும் கைவேலை அப்பியாசங்கள் கைத்தொழில்களைக் கற்றுக் கொள்ளவும் அவற்றில் சித்திபெறவும் இடங்கொடுக்குமென்று விளங்குகிறதல்லவா? ஒரு குமஸ்தா வேலையை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்துவதைவிட ஒரு தொழிலாளியாக இருந்து வேலை பார்ப்பதற்கு அதிகமாய் இடந்தரும் என்பதையறிக.

கல்வியின் நோக்கம் பிள்ளைகளை அவர்களது பிற்கால ஜீவியத்திற்கு ஆயத்தப்படுத்தி அவர்கள் தங்கள் ஜீவியத்தைச் சௌக்கியமாகவும் சௌகரியமாகவும், சந்தோஷமாகவும் நடத்தச் செய்வதே என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இந்த நோக்கத்திற்குக் கைவேலைப்பயிற்சி எவ்வளவு இசைவாயும், பொருத்தமாயும் இருக்கிறதென்பது விளங்கும்.

அன்றியும் உலகத்தில் எந்த நாடு கைத்தொழில்களில் பிரசித்தி பெற்றிருக்கிறதோ அந்த நாடுதான் நாகரீகத்திலும் முன்னேற்றமடைந்த நாடென்றும், செல்வமும், சிறப்பும் சேர்ந்த நாடென்றும் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். இத்தகைய சீர் சிறப்பு

களுக்குக் காரணமாய் இருப்பது கைத்தொழிலின் அபிவிருத்திதான் என்பதையும் கைத்தொழிலின் சிறப்புக்குக்காரணமும் அடிப்படையுமாய் இருப்பது கைவேலைப் பயிற்சிதான் என்பதையும் நாம் "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் அறிந்திருந்தும் இன்னும் நமது பாடசாலைகளில் கைவேலைக் கல்வியின் இலட்சியத்தைக் கடைபிடித்து ஒழுகாமல் அதை அலட்சியம் செய்து வருவதுதான் விந்தையிலும் விந்தையாயிருக்கிறது.

எனவே நாகரீக நாட்டினரைப்போல் நாமும் ஆகவேண்டுமானல் நமது மனப்பான்மையை அவர்களது மனப்பான்மையைப்போல் கைதொழில்களில் பற்றுடையதாய் மாற்றவேண்டுமன்றோ!, நம்மிடம் கல்விகற்கும் மாணவர்களது மனப்பான்மையையும் அவ்வாறு மாற்றவேண்டுமானல் கைவேலை அப்பியாசங்கள் கையாடப்படுதல் அவசியமென்பது தெளிவன்றோ? ஆகவே இனிமேலாவது நமது பாடசாலைகளில் கைவேலை அப்பியாசங்களை அதிகம்திகமாகக் கொடுத்துவருவோமாக. மேலே கூறியபடி பிள்ளைகளின் கண்களையும் கைகளையும் பழக்கி வருகையில் அவர்களது கற்பனைசக்தி யோசனைசக்தி முதிய மனோபாவனைகளும் வளர்ந்து வருகின்றன என்பதை மறக்கவேண்டாம். கைவேலை அப்பியாசங்கள் பிள்ளைகளின் கையையும் மனதையும் பழக்கப் பெரிதும் உதவுமென்றுக் கூறியாயிற்று. இப்பழக்க வழக்கம் கைத்தொழில்களை ஏற்றுக்கொண்டு அவற்றில் சித்திபெறவும் சாதகமாயுள்ளதென்பதையும் நன்குணர்வோமாக.

பறவைக்கூடுகளும், முட்டைகளும்

மக்கள் எவரும் தத்தம் வாழ்க்கை, அந்தஸ்துக்கு ஏற்றாற்போல, தத்தம் இல்லங்களைத் தெரிந்துகொள்ளுகின்றனர் அல்லவா! அவ்வாறே ஆகாயத்தில் பறந்துதிரியும் பறவைஜாதிகளும் தத்தம் வாழ்க்கைக்கு ஏற்றபடி தாம் வசிப்பதின்பொருட்டு கூடுகளை அமைத்துக் கொள்கின்றன.

முட்டைகளின் வடிவும்:—பறவைகள் தங்கள் வாழ்க்கைக்குத் தக்கபடி கூடுகள் அமைத்துக்கொள்வதுபோலவே, கூடுகளின் தன்மைக்குத் தக்கபடி முட்டைகளின் வடிவத் தோற்றங்களும் மாறுபடுகின்றன. வல்லூறு, அண்டங்காகம், நாரை, கருடன் முதலிய உருவத்தில் பெரிய பறவைகள் பெரிய முட்டைகளையும், மரங்கொத்தி, மீன்கொத்தி, புறு, குயில் முதலிய நடுத்தரமான உருவமுள்ள பறவைகள் சிறிய முட்டைகளையும், பலவித சிட்டுக்குருவிகள், தூக்கணாங் குருவிகள் இன்னும் சிறிய முட்டைகளையும் இட்டு, அவ்வவற்றின் முட்டைகளுக்கேற்றவிதமாகக் கூடுகளையும் அமைத்துக்கொள்ளுகின்றன.

பறவைகளின் முட்டைகள் எல்லாம் ஒரேவிதமான வடிவங் கொண்டவையல்ல. சில உருண்டை வடிவமாகவும், சில ஒருபக்கம் கனத்தும் மற்ருேர்பக்கம் முனையுடன் கூர்மையான வடிவமாகவும் இருப்பதைக் காணலாம். மேலும் பறவைகள் எல்லாம் மரத்தில்தான் கூடுகட்டி வாழ்கின்றன என்று இல்லை. சில மரக்கிளைகளிடையிலும், சில மரப்பொந்துகளிலும், சில பாறைகளிலும், சில புள்ளங் குழிகளி லும், கூடுகள் கட்டியோ, வேறுவிதமாக இடம் அமைத்தோ வாழ்கின் றன. கூடுகளில் இருக்கும் முட்டைகள் பாதுகாப்புடையவைகளாத லால் அவை யாவும் உருண்டை வடிவமாக இருக்கின்றன. பாறை முத லிய வெளியிடங்களில் இருக்கும் முட்டைகள் பாதுகாப்பற்றவைகளாத லால் அவை யாவும் இலகுவில் உருண்டு விழுந்துவிடாதபடி ஒரு முனை கனத்து மறுமுனை கூராயிருக்கும். உதாரணமாக, வெளியிடங்களில் வாழும் கோழியைப்போன்றவற்றின் முட்டைகளையும், கூடுகளில் வசிக்கும் கிளிபோன்றவற்றின் முட்டைகளையும், ஒப்பிட்டுப்பார்ப் போம். இவ்விரு முட்டைகளையும் ஒரு மேஜையின்மீது வைத்து மெதுவாக உருட்டிப் பார்ப்போமாகில், கிளி முட்டை உருண்டை வடிவ மாக இருப்பதால் நேராக உருண்டு கீழே விழுந்துவிடும். ஆனால் கோழிமுட்டை முனைக்குமுனை வித்தியாசப்பட்டிருப்பதால் அது ஓரிடத்திலேயே தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருக்குமேயொழிய நேராக உருண்டு ஓடமாட்டாது. இதிலிருந்து பறவையின் முட்டைக் கும், அதன் கூட்டிற்கும் உள்ள சம்பந்தம் நன்கு விளங்குகின்ற தன்ருே?

முட்டைகளின் நிறம்:—பறவைகளின் முட்டைகள் யாவும் ஒரே வித நிறத்துடன் கூடியவையல்ல. ஒரு முட்டையைப் பார்த்தமாத் திரத்தில் அம்முட்டை திறந்த கூட்டிலுள்ள முட்டையா, அல்லது மூடப்பட்ட, பாதுகாப்பமைந்த கூட்டிலுள்ள முட்டையா என எளி தில் கண்டுபிடிக்கலாகும். திறந்த கூட்டிலுள்ள முட்டைகள் விரோதி களின் கண்களுக்கு எளிதில் புலப்படாவண்ணம், ஒளி மழுங்கி, நிறம் குன்றி, சுற்றுப்புறத்துக்கு ஏற்றபடி, சாம்பல் நிறமோ, பழுப்பு நிறமோ, மணல் நிறமோ, பச்சை நிறமோ முதலிய நிறத்துடனும், புள்ளிகளுடனும், புள்ளிகள் இலேசாயும் பலவிதமாய்க் காணப்படும். ஆனால் மூடப்பட்ட கூடுகளிலுள்ள முட்டைகள் நல்ல பாதுகாப் புடையவையாதலால், பளபளப்பாகவும், வெண்மையாகவும் காணப் படுகின்றன.

குயிலின் முட்டைகள் ஆச்சரியத்தையுண்டாக்கும். அவை யாவும் ஒரே பறவையின் முட்டைகள்தானு என்றுகூட சந்தேகிக்க இடங்கொடுக்கும். எவ்வாறெனின், குயில் தன் முட்டைகளை அடை காத்துக் குஞ்சுபொரிக்கச் செயலற்ற ஒரு பறவை. அயல் பறவைக ளின் உதவியால்தான் தன் முட்டைகளைக் குஞ்சுபொரிக்கச் செய்கின்

றது. ஆனதுபற்றி அயல் பறவைகளின் முட்டைகளைப்போல் தானும் முட்டைகளிட்டு அந்தப் பறவைகளின் கூடுகளில் தன் முட்டைகளை வைத்து அவற்றை ஏமாற்றிவிடுகிறது. ஒரே பறவையின் கூட்டில் தன் முட்டைகள் யாவற்றையும் வைத்துவிட்டால் தன் “சூட்டு” வெளிப்பட்டுவிடுமென்றஞ்சி, பலநிற முட்டைகளையிட்டுப் பல பறவைகளின் கூடுகளிலும் வைத்து, ஏமாற்றிவிடுகிறது. காலக்கிரமத்தில் குயிலின் முட்டைகள் அந்தந்தப் பறவைகளால் அடைகாக்கப்பெற்று குஞ்சுகளாகிவிடுகின்றன. குயில் தன் இனத்தை விருத்திசெய்யச் செய்யும் தந்திரத்தைப் பாருங்கள்! என்ன விந்தை!

சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

29, இராகம்: ஹிந்துஸ்தான்] [ஆதிதாளம்

பல்லவி

கா பா க ஸா க பா ; ; பா	க ம ப ம க நீ ரி ஸா ; ; ;
வெற்றிமுழக்கமே . . பூ	எங்கும்முழங்குதே . . .

210002

அனுபல்லவி

கா கா க க ரி ம கா ; ; கா	க ம பா த நீ த பா ; ; பா
நற்றேர்தினம்புகழ். . மா	தவனை துதிப்போமே . .
க ம பா க ஸா ஸ ரி ரி க க ம ம பா	க ம ப ம க நீ ரி ஸா ; ; ;
வெற்றிமுழக்கமே . . . . . பூ	எங்கும்முழங்குதே . . .

சரணங்கள்

ஸ்ா ஸ்ா ஸ் ஸ்ா நி த நீ த தா பா	கா பா த நீ த பா ; ; ஸ்ரி
தீயஜெர்மானியர்போர்	வீரமழிந்ததே . . புகழ்
ஸ்ா ஸ்ா ஸ் ஸ்ா நி த நீ , தா பா	கா பா த நீ த பா ; ; ;
நேயபடைகளின் . . . மா	தீரம்ஜொலித்ததே . . .
க ம பா க ஸா ஸ ரி ரி க க ம ம பா	(வெற்றி.)
ஜெகமேமகிழ்ந்திட	

2. இன்னும் துன்பம்தரும் பேய் ஜப்பான் ஒழிந்திட—பூ
நன்மை கருதிடும் நம் ஆட்சி செழித்திட
தினமே பரனை போற்ற—வெற்றி.

3. சிங்கக் கொடி என்னும் ஜேமங்கா துவண்டிட—சுப
மங்கள மாயென்றும் நம் மன்னர் இலங்கிட
துங்க பரனைப் பாடி—வெற்றி.

Reg. No. M. 1534

பெற்றோர் சங்கங்கள்

இராமநாதபுரம் ஜில்லா, முதுகுளத்தூர் ரேஞ்சு, பூசேரி சென்டர், ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டுவிழா 30—4—'45. இவ்வருட ஆண்டுவிழாவை முன்னிட்டு முதுகுளத்தூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ எஸ். மானெந்தியப்ப பிள்ளை அவர்கள் தலைமையில், வழக்கம்போல், சங்கக் கூட்டம் நடந்ததுடன், மட்டியாரேந்தல் மாணவர்களால், ஜான் பிரிட்டோ என்னும் நாடகமும், ஆரம்ப ஆசிரியர்களால் வைஷலக் என்னும் நாடகமும், சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டது. திரளான ஜனங்கள் குழுமியிருந்தது மெச்சத்தக்கது.

M. I. Felix, Secretary.

செல்லம் முதல்தர ஆரம்பப்பள்ளி உரத்தூர், தஞ்சாவூர் தாலுக்கா. ஷை பள்ளியின் பெற்றோர் சங்க ஆண்டு விழா தஞ்சை வட்டம் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. வி. உமாகாந்தமய்யர் அவர்கள் தலைமையில் 1945-ம் வருடம் மே-மாதம் 24-ந் தேதி (வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெற்றது. ஏராளமான பெற்றோர்கள் கூடியிருந்தனர். பள்ளி மாணவ மாணவிகளால் ஆடல், பாடல், சம்பாஷணைகள் வெகு அழகாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. தலைவர் கல்வியின் அவசியத்தைப்பற்றியும் பள்ளியின் பெருமைகளைப்பற்றியும் வெகு அழகாக எடுத்துரைத்தார். பள்ளியின் மானேஜரும் தலைமையாசிரியருமான T. P. செல்லசாமி அய்யர் யாவருக்கும் வந்தனமளிக்கக் கூட்டம் இனிது கலைந்தது.

T. P. Chellaswamy Iyer,
Manager & Headmaster.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.